ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் புள்ளிவிபரத் திணைக்களம்
திகதி 2017.12.05

## இலங்கை சுபீட்சச் சுட்டெண் - 2016

சுபீட்சமானது, நாட்டினதும் அதன் மாகாணங்களினதும் சுபீட்சத்தின் மட்டத்தினை அளவிடுகின்றதும் ஒப்பீடு செய்கின்றதுமான ஒரு கலப்புக் குறிகாட்டியாக விளங்கும் இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணின்[1] மூலம் அளவிடப்படுகிறது. இது முன்னைய ஆண்டின் 0.684 இலிருந்து 2016இல் 0.746 இற்கு மேம்பட்டிருக்கிறது. இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணின் துணைச் சுட்டெண்களின் அசைவினைப் பகுப்பாய்வு செய்யும் பொழுது, 2015 இலிருந்து 2016 வரையான காலப்பகுதியில் பொருளாதாரம் மற்றும் வியாபாரச் சூழல் மற்றும் மக்களின் நலனோம்புகை துணைச் சுட்டெண்கள் மேம்பட்ட வேளையில் சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண்ணில் மிதமான தன்மையொன்று காணப்பட்டது.

**அட்டவணை 1: இலங்கை சுபீட்சச் சுட்டெண் மற்றும் துணைச் சுட்டெண்கள் 2015 - 2016**


| ஆண்டு | இலங்கை சுபீட்சச் சுட்டெண் | பொருளாதாரம் மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண் | மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண் | சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண் |
|---|---|---|---|---|
| 2015 | 0.685 | 0.871 | 0.625 | 0.558 |
| 2016 | 0.746 | 0.915 | 0.812 | 0.510 |

தொழில்வாய்ப்பு வீதம், முறைசாராத் துறைக் கூலிகள், கைத்தொழில் அடர்த்தி மற்றும் வங்கித்தொழில் அடர்த்தி என்பனவற்றில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண்ணின் அதிகரிப்பிற்குப் பங்களித்தன. மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண்ணைப் பொறுத்தவரையில், முன்னேற்றங்களுக்கு நலத்துறைப் பணி வசதிகளின் கிடைப்பனவு, கல்வியின் கிடைப்பனவு மற்றும் அதன் தரம், மக்களின் செல்வம், பொழுதுபோக்கு வசதிகளின் கிடைப்பனவு மற்றும் பயன்பாடு என்பனவற்றில் காணப்பட்ட உயர்ந்த செயலாற்றம் இவற்றிற்கு முக்கிய தூண்டுதலாக விளங்கின. சமூக பொருளாதார உட்கட்டமைப்புத் துணைச் சுட்டெண்ணில் அவதானிக்கப்பட்ட குறைப்பிற்கு குழாய்வழி நீரின் தரம், குடியியல் நடவடிக்கையில் பெண்களின் பங்கேற்பு மற்றும் போக்குவரத்து வசதிகளின்

[1] இலங்கை சுபீட்சச் சுட்டெண் மாகாணங்களின் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றங்களைப் பிரதிபலிக்கின்ற 43 பிரதிநிதித்துவ மாதிரிகளைப் பயன்படுத்தி அளவிடப்பட்ட மூன்று துணைச் சுட்டெண்களான பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல், மக்கள் நலனோம்புகை மற்றும் சமூக பொருளாதார உட்கட்டமைப்பு என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது.

கிடைப்பனவு என்பனவற்றில் காணப்பட்ட குறைந்த மட்டங்களே காரணங்களாக அமைந்தன. எனினும், சமூக பொருளாதார உட்கட்டமைப்புச் சுட்டெண்ணில் வீதியின் உள்ளடக்க அம்சங்கள், மின்வலுவின் கிடைப்பனவு, குற்றமல்லா சூழல், பாடசாலைகளில் தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப வசதிகளின் கிடைப்பனவு முன்னேற்றத்தினைக் காட்டின.

**வரைபடம் 1: இலங்கை சுபீட்சச் சுட்டெண் மற்றும் துணைச் சுட்டெண்கள் 2012 – 2016**





இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணும் மற்றும் அதன் அனைத்துத் துணைச் சுட்டெண்களும் கடந்த ஐந்து ஆண்டுகளாக அதிகரித்துச் செல்லும் போக்கையே எடுத்துக்காட்டின. 2012 - 2016 காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட கூடிய வளர்ச்சி அதன்பின்னர் மிதமடைந்தமைக்கு சமூகப் பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண்ணில் பதிவுசெய்யப்பட்ட குறைந்த செயலாற்றமே காரணமாகும்.

## மாகாண ரீதியான சுபீட்சச் சுட்டெண்

மேல் மாகாணம் தொடர்ந்தும் முன்னனி நிலைமையை வகித்து ஒட்டுமொத்த சுபீட்சச் சுட்டெண்ணில் 1.272 கொண்ட உயர்ந்த பெறுமதியைப் பதிவுசெய்தமையின் மூலம் 2015 உடன் ஒப்பிடுகையில் 0.029 சுட்டெண் புள்ளிகொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. மற்றைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் மேல் மாகாணத்தின் உயர்ந்த செயலாற்றத்திற்கு அனைத்து மூன்று துணைச் சுட்டெண்களிலும் உயர்ந்த தரங்கள் பேணப்பட்டமையே காரணமாகும். சப்பிரகமுவா மாகாணம் தவிர்ந்த மற்றைய அனைத்து மாகாணங்களும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016ஆம் ஆண்டுப்பகுதியில் உயர்ந்த ஒட்டுமொத்த சுபீட்சச்சுட்டெண் பெறுமானங்களைப் பதிவுசெய்தன. சப்பிரகமுவா மாகாணத்தின் ஒட்டுமொத்த சுபீட்சச் சுட்டெண் வீழ்ச்சியடைந்தமைக்கு நீரின் தரம் மற்றும் சமூகப் பொருளாதார மாறிகள் என்பனவற்றின் மீது 2016இன் வெள்ள நிலைமை கொண்டிருந்த தாக்கம் காரணமாக சமூகப் பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண் மிதமடைந்தமையே காரணமாகும். கிழக்கு மாகாணம் 2016இல் மாகாணத் தரத்தில் அதே மட்டத்திலே காணப்பட்டபோதும், ஒட்டுமொத்த சுபீட்சச் சுட்டெண்ணில் 0.072 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பினை பதிவுசெய்தது. இதற்கு அனைத்து மூன்று துணைச் சுட்டெண்களிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களே காரணமாகும். ஒட்டுமொத்த சுபீட்சச் சுட்டெண்ணில் 0.082 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட உயர்ந்த அதிகரிப்பு வடமேல் மாகாணத்திலிருந்து பதிவுசெய்யப்பட்டிருக்கின்றது. ஒட்டுமொத்த சுபீட்சச் சுட்டெண் நியதிகளில் ஒன்பது மாகாணங்களினதும் மாகாண ரீதியான தரங்கள் 2015 இலிருந்து 2016 காலப்பகுதியில் மாற்றமின்றிக் காணப்பட்டன. ஒட்டுமொத்த சுபீட்சச் சுட்டெண்ணின் மாகாண ரீதியான செயலாற்றம், வரைபடம் 02 மற்றும் அட்டவணை 02 இல் விபரமாகத் தரப்பட்டுள்ளன.


**வரைபடம் 2: சுபீட்சச் சுட்டெண் 2015 – 2016**




## பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண்

பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண்ணின் செயலாற்றும் மத்தி, வடக்கு மற்றும் தென் மாகாணங்கள் தவிர மற்றைய அனைத்து ஆறு மாகாணங்களிலும் மேம்பட்டிருக்கிறது. இம் முன்னேற்றத்திற்கு குறைவான தொழிலின்மை, முறைசார்ந்த துறையின் தொழில்வாய்ப்புக்கள் அதிகரித்தமை, முறைசாரா துறைக்கூலிகளில் பதிவுசெய்யப்பட்ட உயர்ந்த தரங்கள், கைத்தொழில் அடர்த்தி மற்றும் வங்கித்தொழில் அடர்த்தி என்பனவே முக்கிய காரணங்களாக அமைந்தன. மாகாண ரீதியான தரமிடல் நியதிகளில் மேல் மாகாணம் அதன் மிகமுக்கிய நிலையினை தக்கவைத்திருப்பதுடன் அதனைத் தொடர்ந்து வடமாகாணம் மற்றும் வடமேல் மாகாணங்கள் முன்னிலையில் காணப்படுகின்றன. தலைக்குரிய வருமானம், முறைசாராத் துறைக்கூலிகள், தாழ்ந்த தொழிலின்மை வீதம், முறைசார்ந்த துறையின் தொழில்வாய்ப்பு, வங்கித்தொழில் அடர்த்தி மற்றும் கைத்தொழில் அடர்த்தி என்பன மேல் மாகாணத்தின் உயர்ந்த செயலாற்றத்தினைத் தூண்டிய முக்கிய விடயங்களாகக் காணப்படுகின்றன. கிழக்கு, வடமேற்கு மற்றும் தென் மாகாணங்களின் மாகாண ரீதியான தரங்கள் மேம்பட்டுள்ள வேளையில் வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் தரங்கள் மாற்றமின்றி காணப்பட்டன. பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண்ணில் மாகாணங்களின் செயலாற்றம் வரைபடம் 3 மற்றும் அட்டவணை 2 இல் விபரமாகத் தரப்பட்டுள்ளன.


**வரைபடம் 3: பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண் 2015 - 2016**



### மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண்

மத்தி, வடக்கு, தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களுடன் 2016இல் அனைத்து ஒன்பது மாகாணங்களிலும் மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண்ணின் பெறுமானங்கள் அதிகரித்தமைக்கு, 2015 உடன் ஒப்பிடுகையில், நலக்கவனிப்பு வசதிகளின் கிடைப்பனவு, தரமான கல்வி வசதிகளின் கிடைப்பனவு, மக்களின் செல்வம் மற்றும் காற்றின் தரம் என்பனவற்றில் பதிவுசெய்யப்பட்ட உயர்ந்த செயலாற்றங்களே முதன்மைக் காரணங்களாக அமைந்தன. மேல் மாகாணம் மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண்ணில் அதன் முதல் இடத்தைத் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றமைக்கு தரமான கல்வி வசதிகளின் கிடைப்பனவு, மக்களின் செல்வம், பொழுதுபோக்கு வசதிகளின் கிடைப்பனவு மற்றும் அவற்றின் பயன்பாடு ஆகிய துறைகளிலிருந்து கிடைத்த சாதகமான தாக்கங்கள் முக்கிய காரணங்களாக அமைந்தன. வட மத்திய மற்றும் வட மேல் மாகாணங்கள் தவிர்ந்த மற்றைய அனைத்து மாகாணங்களினதும் மாகாண ரீதியான தரங்கள் முன்னைய ஆண்டினைப் போன்று மாற்றமின்றிக் காணப்பட்டன. மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண்ணில் மாகாணங்களின் செயலாற்றம் வரைபடம் 4 மற்றும் அட்டவணை 2இல் விபரமாகத் தரப்பட்டுள்ளன.

**வரைபடம் 4: மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண்[2] 2015 - 2016**





### சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண்

சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண்ணின் மாகாண ரீதியான பெறுமானங்கள் மத்தி, கிழக்கு, வடமேற்கு மற்றும் மேல் மாகாணங்களில் அதிகரித்திருப்பதற்கு மின்வலு, போக்குவரத்து, தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப வசதிகளின் கிடைப்பனவில் ஏற்பட்ட முன்னேற்றங்களே முக்கிய காரணங்களாகும். 2016இல் சப்பிரகமுவா மாகாணத்தின் சமூகப் பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண் கணிசமமாக வீழ்ச்சியடைந்தமைக்கு 2015 உடன் ஒப்பிடுகையில் குழாய்வழி நீரின் தரம் மற்றும் குடியியல் நடவடிக்கைகளில் பெண்களின் பங்கேற்பு என்பனவற்றின் செயலாற்றத்தில் மிதமான மட்டம் காணப்பட்டமையே முக்கிய காரணமாகும். அனைத்து மாகாணங்களிடையேயும் சமூகப் பொருளாதார

[2] லெகாட்டம் சுபீட்சச் சுட்டெண் முறையியலை மிக நெருக்கமாகப் பின்பற்றும் விதத்தில் ஒவ்வொரு மாறியினையும் தரப்படுத்துவதன் மூலம் சுட்டெண்ணின் பெறுமதிகள் தொகுக்கப்படுகின்றன. ஆகவே, சுட்டெண் பெறுமதியொன்றின் அடையாளம் தொடர்பான சராசரிகளுடன் ஒப்பிடுகையில் அவற்றின் நேர்க்கணிய மற்றும் எதிர்க்கணிய பிறழ்வுகளைச் சுட்டுகின்றன. எனவே சுட்டெண்ணிலுள்ள எதிர்க்கணியப் பெறுமதிகள் சுபீட்ச மட்டங்கள் எதிர்க்கணியமாக இருப்பதனைச் சுட்டுவதில்லை.

உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண்ணின் பங்களிப்பில் மேல் மாகாணம் தொடர்ந்தும் உயர்ந்த பங்களிப்பினை தக்கவைத்துக்கொண்டது. மின்வலுவின் கிடைப்பனவு, தொலைத்தொடர்பூட்டல் வசதிகள், வீதி வசதிகளின் உள்ளடக்கம், போக்குவரத்து வசதிகள், தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப வசதிகள், மற்றும் குடியியல் நடவடிக்கைகளில் பெண்களின் பங்கேற்பு என்பனவற்றில் காணப்பட்ட உயர்ந்த மட்டங்கள் மேல் மாகாணத்தின் முன்னனிச் செயலாற்றத்திற்குப் பங்களித்தன. சமுக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண்ணில் மாகாண ரீதியான தரமிடலில் கிழக்கு, வடமேற்கு மற்றும் தென் மாகாணங்கள் தமது நிலையினை மேம்படுத்திக்கொண்ட வேளையில் சப்பிரகமுவா மற்றும் ஊவா மாகாணங்களின் தரமிடல் வீழ்ச்சியடைந்திருக்கிறது. சமுக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண்ணில் மாகாணங்களின் செயலாற்றம் வரைபடம் 5 மற்றும் அட்டவணை 2 இல் விபரமாகத் தரப்பட்டுள்ளன.

**வரைபடம் 5: சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண் 2015 - 2016**



அட்டவணை 2: ஒட்டுமொத்தச் சுபீட்சச் சுட்டெண் மற்றும் துணைச் சுட்டெண்களின் சுட்டெண் பெறுமதியும் அவற்றின் மாகாணத் தரங்களும்

| சுட்டெண் மற்றும் மாகாணம் | சுட்டெண் பெறுமதி | | மாகாணத் தரம் | |
|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2015 | 2016 |
| **ஒட்டுமொத்த சுபீட்சச் சுட்டெண்** | | | | |
| மத்திய | 0.370 | 0.450 | 3 | 3 |
| கிழக்கு | 0.062 | 0.135 | 9 | 9 |
| வட மத்திய | 0.360 | 0.400 | 4 | 4 |
| வட மேல் | 0.274 | 0.356 | 5 | 5 |
| வடக்கு | 0.232 | 0.239 | 6 | 6 |
| சப்பிரகமுவா | 0.222 | 0.153 | 7 | 7 |
| தென் | 0.435 | 0.455 | 2 | 2 |
| ஊவா | 0.133 | 0.151 | 8 | 8 |
| மேல் | 1.243 | 1.272 | 1 | 1 |
| **பொருளாதாரம் மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண்** | | | | |
| மத்திய | 0.514 | 0.490 | 2 | 4 |
| கிழக்கு | 0.221 | 0.333 | 8 | 6 |
| வட மத்திய | 0.478 | 0.513 | 3 | 3 |
| வட மேல் | 0.448 | 0.515 | 4 | 2 |
| வடக்கு | 0.430 | 0.301 | 5 | 7 |
| சப்பிரகமுவா | 0.244 | 0.281 | 7 | 8 |
| தென் | 0.404 | 0.388 | 6 | 5 |
| ஊவா | 0.129 | 0.181 | 9 | 9 |
| மேல் | 1.668 | 1.715 | 1 | 1 |
| **மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண்** | | | | |
| மத்திய | 0.181 | 0.300 | 6 | 6 |
| கிழக்கு | -0.066 | 0.036 | 9 | 9 |
| வட மத்திய | 0.301 | 0.404 | 4 | 3 |
| வட மேல் | 0.311 | 0.398 | 3 | 4 |
| வடக்கு | 0.224 | 0.391 | 5 | 5 |
| சப்பிரகமுவா | 0.172 | 0.238 | 7 | 7 |
| தென் | 0.640 | 0.771 | 2 | 2 |
| ஊவா | -0.013 | 0.143 | 8 | 8 |
| மேல் | 1.144 | 1.173 | 1 | 1 |
| **சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண்** | | | | |
| மத்திய | 0.415 | 0.561 | 2 | 2 |
| கிழக்கு | 0.032 | 0.036 | 9 | 7 |
| வட மத்திய | 0.300 | 0.282 | 3 | 3 |
| வட மேல் | 0.064 | 0.156 | 7 | 5 |
| வடக்கு | 0.043 | 0.024 | 8 | 8 |
| சப்பிரகமுவா | 0.248 | -0.061 | 6 | 9 |
| தென் | 0.259 | 0.207 | 5 | 4 |
| ஊவா | 0.284 | 0.129 | 4 | 6 |
| மேல் | 0.917 | 0.928 | 1 | 1 |

## தொழில்நுட்பக் குறிப்பு:

**சுட்டெண்**

இலங்கை சுபீட்சச் சுட்டெண் இலங்கை மத்திய வங்கியினால் தொகுக்கப்படுகின்ற ஒரு பல்பரிமாணக் குறிகாட்டியாகும். இலங்கை சுபீட்சச் சுட்டெண் 43 மாறிகளை உள்ளடக்கிய மூன்று துணைச் சுட்டெண்களாக வகைப்படுத்தப்படுகிறது. மூன்று துணைச் சுட்டெண்களாவன பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண், மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண் மற்றும் சமுக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண். அனைத்து மூன்று துணைச் சுட்டெண்களும் இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணில் சமமான நிறைகளைக் கொண்டிருப்பதுடன் ஒவ்வொரு மாறியும் அதற்குரிய துணைச் சுட்டெண்களுக்குள் சமமான நிறையைக் கொண்டிருக்கும்.

பொருளாதார வியாபார சூழல் துணைச் சுட்டெண் வாழ்க்கைத்தரம், தொழில்நிலை, வருமானம், வறுமை, விலை உறுதிப்பாடு, துறைவாரியான தொழில்நிலை, கைத்தொழில் அடர்த்தி மற்றும் வங்கித்தொழில் அடர்த்தி ஆகிய வகைகளாக்கப்பட்ட 9 மாறிகளைப் பயன்படுத்தி தொகுக்கப்படுகிறது. மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண் நலக் கவனிப்பு வசதிகளின் கிடைப்பனவு, கல்வி வசதிகளின் கிடைப்பனவு, கிடைக்கத்தக்க கல்வி வசதிகளின் தரம், செல்வம், பொழுதுபோக்கு வசதிகளின் கிடைப்பனவு மற்றும் பயன்பாடு, காற்றின் தரம் மற்றும் சூழலின் சுத்தமான தன்மை என்பன தொடர்பான 22 மாறிகளை உள்ளடக்கித் தொகுக்கப்படுகிறது. சமுக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண் 12 மாறிகளை உள்ளடக்கி இருப்பதுடன் அவை தொடர்பான அம்சங்களாக மின்வலுவின் கிடைப்பனவு, தொடர்பூட்டல் வசதிகளின் கிடைப்பனவு, வீதி உள்ளடக்கத்தின் கிடைப்பனவு, குற்றச்செயலற்ற சூழல், போக்குவரத்து வசதிகளின் கிடைப்பனவு, சுத்தமான குடிநீர் வசதிகளின் கிடைப்பனவு, தரமான குழாய்வழி நீர், தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப வசதிகளின் கிடைப்பனவு, சுகாதாரக் கிடைப்பனவு குடியியல் நடவடிக்கைகளில் பெண்களின் பங்கேற்பு என்பன காணப்படுகின்றன.

**முறையியல்**

லேகாட்டம் சுபீட்சச் சுட்டெண்ணின் முறையியலை மிக நெருக்கமாகப் பின்பற்றும் புதிய முறையியலை அதாவது தரவுகளை இயல்பு நிலைப்படுத்துகின்ற நிலைமைக்குப் பதிலாக அனைத்து மாறிகளையும் மற்றொன்றின் விகிதாசாரத்திற்குக் கொண்டு வருகின்ற தரவினை நியமப்படுத்துகின்ற புதிய முறையியலொன்று 2014 இலிருந்து இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணின் தொகுப்பதில் பின்பற்றப்படுகின்றது.